திருவிராமேச்சுரத்தைச் சார்ந்த பாம்பன் :

ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகள்

அருளிச்செய்த

செக்கர்வேள் செம்மாப்பின் ௨-ங் காண்டத்துக்

# கனவதிகாரமும்,

௧௧௦௧ - செய்யுள்களடங்கிய திருப்பாவிலுள்ள

# பெருமிறைக்கவியுரையும்.

First Edition—700 Copies.

1913.

உ

சிவமயம்.

குமாரகுருப்யோ நம:

திருவிராமேச்சுரத்தைச் சார்ந்த பாம்பன் :

ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகள்

அருளிச்செய்த

சேக்கர்வேள் செம்மாப்பின் உ-ங் காண்டத்துக்

# கனவதிகாரமும்,

கக0க - செய்யுள்களடங்கிய திருப்பாவிலுள்ள

# பெருமிறைக்கவியுரையும்.

மேற்படி சுவாமிகளுடைய சிஷ்யவர்க்கத்து ளொருவரும்,
சென்னைத் திருவல்லிக்கேணியிற் சோதிடருமான
பு. சின்னஸ்வாமி முதலியாரால்

சென்னை : புரோகிரஸ்ஸிவ் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டன.

1913. ] — [இதன் விலை அணா 2.

# முன்னுரை.

(கனவு விவரம்.)

(க) நன்று தீதெனும் பலனுக்குரிய கனவுகள். "தேவ தாவிம்பம்" என்றற் றொடக்கத்தது முதல் "தன்மனைதனில்" என்றற் றொடக்கத்த தீறாக வுள்ள ௩௫ - செய்யுள்களும், ௩௯ - ம், ௪0 - ம்.

(உ) சொப்பனத்திற் கண்டபடி சாக்கிரத்திற் பலிக்குங் கனவு. செ - ௩௬, ௩௭.

(௩) சாக்கிரச் செய்கையை யுறுதிப் படுத்துங் கனவு. செ - ௪௬.

(௪) திருவருட்செயற்கனவு. செ - ௩௬.
பெரியோர்காண்பன. செ - ௪க.

(௫) வினைப்பேற்றுக்கனவு. செ - ௩௬.
பகற்கனவு. செ - ௪௨.
உட்டிணத்தா லுறுங்கனவு. செ - ௪௩. இக்கனவிற்றான் மரணகாலத்தி லறிவுமயங்குதல்போல வுணர்வு மயங்கும்.

(௬) பழைய வாசனைக் கனவு. செ - ௪௯.

(௭) சூக்குமதேகம் ஆகாயத்திற் பறந்துசெல்லுந் தன்மைத்தென்பதைக் கனவிலறிதல். செ - ௫0.

(அ) விந்து வெளிப்படும் அனுபவம் சூக்குமதேகத்துக்குந் தூலதேகத்துக்குங் கனவின் வழியாக வொன்றாயிருத்தல். செ - ௫அ.

(௯) பொய்ப்படு கனவு, செ - ௩௭.

(க0) உருவெளித்தோற்றம், செ - ௪௯, ௫க,

இவ்விவர மறியாமே கனவெல்லாம் பொய்யென் பார் கோட்பாடு.—ருஎ-ஞ்செய்யு ளுரைக்குமாறு சொப்பனத்திற் சாக்கிர வுலகும், சாக்கிரத்திற் சொப்பன வுலகும் மறையும், அவை பொய்யாதல் யாங்ஙனமென்பதையும்; ருசு-ஞ் செய்யுளுரைக்கு மாறு சாக்கிரப் பிரபஞ்சந் தூலதேகப் புசிப்பாக வும், சொப்பனப்பிரபஞ்சஞ் சூக்குமதேகப் புசிப் பாகவு நிற்கு மென்பதையும்; சொப்பனத்தும், சாக்கிரத்தும், உரைவழியினு மறிந்தபடி யாதொன் றை அச் சொப்பன சாக்கிரங்களில் மனமே செய்து கொள்ளு மென்று சகூ-ஞ் செய்யுள் கூறுமது கொண்டே ஆகாயத்திற் பறந்துசேறலு மாமெனல் கூடாது: அது சூக்குமதேகத்திற்குள்ள செயலா மென் பது—செக்கர்வேளுக்கு ஆறுமுகங்க ளுளவென்று நூலுரைவழி யறிந்தபடி கனவு காண்போற்கும் அத் திற முகங்க ளுண்டாமா றில்லையென ருo-ஞ்செய்யு ளுரைக்குமாற்று னிலையுறுதலையும்; ரு அ-ஞ் செய்யு ளுரைக்குமாறு சீவனானவன், இவ்வுலகமும் பரலோக முமாகிய இரண்டற்கு நடுவாய கனவுநிலையி லிருந்து அவ்விரண்டனையு மனுபவிக்கின்றன னென்று சுருதி சொல்லுதலையும்; சஅ-ஞ்செய்யு ளுரைக்குமாறு எல் லாக் கனவையும் பொய்யென்போனுக்கு, இறைவ னனுக்கிரக நிலைக்களங்களி லொன்றாயுள்ள கனவின் கண் அவனனுக்கிரகிப்பதூஉம் பொய்யாய்விடுமே யென்பதையும்; பிறவற்றையும் ஓராப் பெருங்கேட் டை விளைப்பதாகு மென்பதை யறிவுறுத்துதற்கே இக் கனவதிகார மெழுந்தது. அறிக.

---

சிவமயம்.

குஹப்ரஹ்மணேநம:

செக்கர்வேள் செம்மாப்பின்

உ-ங் காண்டத்துக்

# கனவதிகாரம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

[தெய்வ விக்கிரகமானது பேசுதல், கரமசைத்தல், சிரமசைத்தல், சிரித்தல்.]

தேவதா விம்ப நன்கு
தெரிசிக்கு ஞான்றவ் விம்பம்
நாவினாற் பேசல் கையு
நவிரமு மசைத்தல் யாணர்
ஓவுரு முறுவல் காட்ட
லுறுகன வினிலே காணின்
தாவிலா துறுசஞ் சார
காலமென் றிறைநூல் சாற்றும். க

[தனது மனையிலே பெருந்தீப்பற்றி யெரிதல், அழகிய கன்னிப்பருவ முடையாள் சுமங்கலி யிவர்கள் வந்து நுழைதல், நல்லவர்கள் வந்து தீபம் நீர்நிறைகுடம் இவற்றைக் கொடுத்தல்.]

வன்முனை கொளுவு தீப்போல்
வாளன லெரிய மூர்த்தப்
புன்மையி லழகார் கன்னி
சுமங்கலி புகுத வான்ற

நின்மலர் வந்து தீப
நிறைகுட மளிக்க நீங்காத்
தன்மனை தனிற்கண் டக்காற்
றுவறு செல்வ மாமே. உ

[பால், மலம், சோறு, பழம், திருநீறு, மஞ்சள்,
வெண்ணிறப்பாம்பு, நாய், நரி.]

பான்மலஞ் சோறு நல்ல
பழந்திரு நீறு காணின்
மேன்மைசொல் பொருளி லாபம்
விளம்பிவை புசிக்கக் காணின்
மான்மனை யாக்க நாச
மஞ்சளொண் பாம்பு காணின்
நான்மகி புகழ்சந் தானம்
நாய்நரி காணி லச்சம். ந

[நாய் நரி கழுதையென்பன வீட்டினுழைதல், பலகார
வர்க்கங்கள் வந்துசேரல், சிறு தானியங்கள்
வந்து குவிதல், யாற்றிலே நீர் நிரம்
பல், பயிர் தழைவுற்றிருத்தல்.]

நாய்நரி கழுதை வீட்டு
ணுழைந்திட நறுஞ்சிற் றுண்டி
யாய்வரு வனவந் தெய்த
வார்சிறு தானி யங்கள்
ஓய்வறக் குவியக் காணி
னுறுகணீ நோயாம் யாற்றிற்
பாய்புன னிரம்பப் பைங்கூழ்
தழைவுறப் பார்க்கி னன்காம். ச

[யாறு பெருகி யுடைத்திடல், விளைந்த கதிர்
முதலியவற்றை யறுத்தல், உதிரமோடல்.]

கரைநதி பெருகி யாங்கே
யுடைத்திடக் கனவு காணின்
விரைவினிற் படைவந் தெய்தும்
விளைந்தவை யறுக்கக் காணிற்

புரையறு முறவுக் கெல்லாம்
புந்தியிற் கலக்க மெய்துந்
தரையினிற் குருதி யோடத்
தரிசிக்கின் மாரி பெய்யும். ரு

[குளம் கிணறு நதி இவைகள் வற்றுதல், மொட்டைத்தலை,
விவாகாலங்காரங்கள், உடம்பெங்கும் பூசப்பட்ட
எண்ணெய், தீண்டக்கூடாதார் தீண்டல்.]

வாவிகூ வங்கள் யாறு
வற்றிடக் கனவு காணின்
மேவுமே வறுமை மொட்டை
விவாககோ லங்கள் யாக்கை
யாவுமே யெண்ணெய் தீண்டா
தார்தொட லென்ப வற்றேன்
றேவுறு துறக்க வுவிற்
காண்பனே லுளம்புண் ணுகும். சு

[சைல சிகரம் உப்பரிக்கை கோபுரம் முதலிய உன்னதத்
தானங்களி லெதனிலேனுந் தானிருக்குஞான்று
தனதருகிலுள்ளார் தங்கரங்களைத் தலையிற்
குவித்துக்கொண்டு நிற்றல், நல்ல
குதிரை யானை சிவிகை யிவை
களி லெதிலேனுந் தான்
ஏறிச் செல்லல்.]

மலையின துச்சி யுப்ப
ரிக்கைகோ புரமற் றேங்கு
நிலையினி லிருக்கத் தன்பா
னெருங்கியுள் ளோர்கள் கையைத்
தலையினிற் கூப்பி நிற்கத்
தானறுங் குதிரை யானை
விலையுயர் சிவிகை யூரக்
கண்டிடின் வாழ்க்கை மேவும். எ

[கையிற் றடிபிடித்த வொருவன் றெற்கே யிருந்துவந்து தன்னையழைத்தல், தன்னுடைய வுறுப்புக்களி லொன்றனை அவன் ஈர்த்தெடுத்தேகல், அவ னைக்கண்டவுடனே தான் அலறல், தன்னைக் குரங்கு தெற்குநோக்கிச் சுமந்துபோதல்.]

தெற்கிருந் தொருவன் கையிற்
றிணிதடி தாங்கி யேதன்
முற்குவந் தழைத்த லன்னோன்
மெய்யுறுப் பினிலொன் றீர்த்தே
அற்பற வேக லெய்து
மவனைக்கண் டலறன் மந்தி
தெற்கினிற் சுமந்து போதல்
கனவுறிற் சாவு சேரும். அ

[கரியநிறமுங் குறுகிய வுடம்புமுள்ள கணிகையினது கை யைப் பிடித்துக்கொண்டு தெற்கேபோதல், தன்னு டைய கைகால் உடம்பு நடுக்கமுறுதல், தன் னுடைய பிள்ளையை ஒருவன் இரண்டு கைகளாலும் எடுத்துக்கொண்டு தெற்கே யோடக்கண்டு தான் பின்றொடர்ந் தழுதல்.]

கருநிறக் குறிய மேனிக்
கணிகைகை பிடித்துத் தென்பால்
விரைவுறப் போகக் காணின்
மெய்கைகா னடுங்கக் காணின்
இருகரத் தொருவன் பிள்ளை
யெடுத்துமே தென்பா லோடத்
தரிசித்துத் தொடர்ந்து விம்மக்
கண்டிடிற் சாவு சாரும். கூ

[உலர்ந்துபோன மொட்டைமரத்தில் எண்ணெயிட்ட வுடம்போடேறல், இரதம் விக்கிரகமென்பன தெற்கேபோதல், பகடு கழுதை நாய் என்

பவற்றென்று தன்னைச் சுமந்துகொ
ண்டு தெற்குநோக்கி யேகல்.]

எண்ணெயிட் டுலர்ந்த மொட்டை
மரத்தினி லேற வோரார்
திண்ணிய தேர்தே விம்பந்
தென்றிசைக் கேக மைந்து
நண்ணிய பகடு கோகு
நாயிவற் றென்று தெற்கே
கண்ணுறு தனைக்கொண் டேகக்
கண்டிடி லெய்துஞ் சாவே. ௧௦

[பிணத்தின்மீ தேறுதல்.]

இயங்குயி ரில்லா யாக்கை
யேறவே தனைக்காண் போனும்
இயங்கலின் றொல்லை சாவா
னிறைவனா லென்ற தாதி
இயம்பிய யாவு மன்ப
ரிடுக்கண தொழித்து ஞானம்
இயம்பொரு செவ்வேள் கும்பற்
கியம்பொரு தமிழ்நூல் கூறும். ௧௧

[சடலைந்தாண்டுதல், யாற்றைத்தாண்டுதல், ஆகாயத்தி
னடந்துபோதல், சூரியன், சந்திரன், செவ்வாய்,
எரிகின்ற நெருப்பு, நக்ஷத்திரங்கள், செவ்
வேள்மூர்த்த மமைந்துள்ள கோவில்கள்.]

சமுத்திர தரணந் தூய்மை
சானதி தரணம் வானிற்
சுமக்கழ னடக்கச் சேறல்
சூரியன் சோமன் செவ்வாய்
இமைத்தெரி நெருப்பு விண்மீ
னெம்பிரான் செவ்வேண் மூர்த்தம்
அமைத்தநற் சினக ரங்கள்
கனவுறி னினைத்த தாகும். ௧௨

[மாமிசம் கள் வெண்ணிறத்தயிர் என்பவற் றெதனை
யேனு முண்ணல், வெண்ணிற வுடையுடுத்
தல், ஆபரணம், இரத்தாபிடேகம்.]

புலான்மது வருந்தல் வெண்மை
பூக்குநற் றயிர்தா னுண்டல்
கலாமதி யனைய வாடை
கட்டுதன் மணிப்பூண் செம்மை
உலாமிரத் தாபி டேக
முறுகண வினிற்கண் டக்கால்
அலாபமில் கீர்த்தி யாமென்
றறைகுவ ரறிவின் மிக்கார். கங

[செவ்வேள் முதலிய தெய்வங்கள், குடை, வேதியர்,
அரசன், பறவைகள், ஆபரணமணிந்த தேவதாசி,
பெரியமலை, உமி, புட்பம், எருது, வெண்
ணிறப் புட்பம், கண்ணடி, பழுத்த
பழங்களோடுள்ள தருவிலேறல்,
பூந்தரு, இறைச்சி, தடாகம்.]

செக்கர்வே ளாதி தெய்வங்
கவிகைவே தியரு ராள்வோன்
பக்கிகள் பணிபூண் டாசி
பருமலை யுமிபூ வேறு
மிக்கவெண் மலர்கண் ணடி
மென்கனி விருக்க மேறல்
தக்கபூந் தருவி றைச்சி
தடாகங்கண் டிடினோய் தீரும். கச

[மீன்களைப் பிடித்துக்கொள்ளல், மனிதன் குடலைக்
கழுத்திலே மாலையாகச் சுற்றிக்கொண்டு ஒரு
கிராமத்தின் மத்தியி னிற்றல்.]

மீனனி பிடிக்கக் காணின்
வெள்ளிக்கா சுகளை யெய்தும்
மானுடன் குடரைக் கண்ட
மாலையாய்ச் சுற்றிக் கொண்டு

கானமி லோர்கி ராம
நடுநிற்கக் காணி னுற்ப
தானகி ராம மாள்வ
னலதொரு நாட்டை யாள்வன். கரு

[பிணம், இரத்தம், பொன், தகாத மாதின் புணர்க்கை,
மற்ற மாதின் புணர்க்கை, தனதுடம்பில்
எச்சில் முதலிய அசுத்தங்கள் படல்.]

பிணமுதி ரம்பொன் காண்டல்
பெண்களிற் றகாத மாதின்
புணர்விவட் கேவே றுவாள்
புணர்விவை செயக்காண் டற்கும்
அணவுதன் னுடலி லெச்சி
லசுத்தங்கள் படக்காண் டற்கும்
பிணியறு முயர்ந்த செல்வப்
பேறுறும் புதுவ தெய்தும். கசா

[சுவர்மீதிருந்து புசித்தல், தேள், தாமரை
யிலையிற் பாயசம்வார்த் துண்டல்.]

சுவரிருந் துண்ணக் காணிற்
சுயவுத்தி யோகத் தின்பாங்
கவருடைப் பதத்தேள் காணிற்
கவலற வென்றி கூடும்
நவையறு பாய சந்தா
னளினபத் திரம்வார்த் துண்ண
அவலமி லாது காணிற்
பிரபுவு மாவ னென்பார். கள

[தேள் தனது விடத்தைப் பிரயோகித்தல், உதிரத்தைக்
குடித்தல், வெண்ணிறப்பாம்பு கறித்தல், எரிகின்ற
நெருப்பினகப்படல், நல்லபாம்பு வலப்புயத்
தேறுதல், இவன் பொல்லாதவனெனப்

பிறராற் கட்டப்பட்டபோது
தானழுதல்.]

தேளிகல் விடத்தை யேற்றச்
செவ்விய விரத்த முண்ணக்
கோளில்வெள் ளரவு தீண்டக்
கூர்ந்தெரி கனற்குள் ளாக
வாளெயிற் றினிய பாம்பு
வலப்புயத் தேறப் பொல்லா
ஆளென யாக்க ப்பட்டே
யழுதிடக் காணி னன்காம். கஅ

[விலங்குபூணல், தோணியிலேறிப்போகுதல், நெருப்பிற்
றனதுடம்புவேதல், பறவைகளைப் பிடித்தல்,
தனதுடம்பி லெறும்புக்கூட்ட மூர்தல்,
சந்தனம் பூசுதல், தேவாலயத்திற்
செய்யப்படும் பூசனை.]

கனவடல் விலங்கு பூணல்
கலமிசை யேறிப் போதல்
தனதுடம் பனற்கண் வேதல்
சகுனங்கள் பிடித்தல் யாக்கை
தனிலெறும் பீட்ட மூர்தல்
சந்தனம் பூசல் புத்தேள்
மனையிற்செய் பூசை யென்னும்
வகையிலொன் றறினு நன்றே. ககூ

[வெள்ளாடையுடுத்து வெண்மலரணிந்து சந்தனமுந்
திமிர்ந்துளானை யணைந்திடல், சூரியனைச் சந்
திரனைப் பிடிப்பாரைப்போன்று
விண்ணிலே தாவுதல்.]

வெள்ளிய வாடை வெண்பூ
வீக்கினன் கணிந்து சந்தம்
அள்ளியே பூசி னானை
யணைந்திடல் செக்கர் வேடான்
உள்ளுற விளங்கா தித்த
னொண்மதி பிடிப்பார் போல

ஒள்ளிய விசும்பிற் றூவ
ஓறுகண வுறினு நன்கே. ௨0

[தித்திப்பான பண்டம், தேங்காய், மாம்பழம், குடை, பாத ரக்ஷை, எலுமிச்சம்பழம், மஞ்சள், எழுத்தாணி யென் பனவற் றெதனையேனும் பெறுகை. நீர்நிறை குடம், பூமாலை, மயில், கருடன், அன்றிலென் பனவற் றெதனையேனுங் காண்கை.]

மதுரப தார்த்தந் தேங்காய்
மாங்கனி குடைகாற் காப்புக்
கதழ்வுடைச் சம்பீ ரத்தின்
கனிமஞ்ச ளெழுது மாணி
இதமுடன் பெறக்கண் டாலு
மெழினிறை குடம்பூ மாலை
மதர்மயில் கருட னன்றில்
காணினு மருவு நன்கே. ௨௧

[சுமங்கலி, புத்தகம், தயிர், எரிகின்ற தீபம், சாமரம், வேத பாராயணம், (கனவுகாண்போன்) தன் றலையைத் தானே தின்றல்.]

துயில்வரு கனவின் கண்ணே
சுமங்கலி யெழுத்தார் கோசந்
தயிரெரி தீபம் யாணர்ச்
சாமரம் வேத சாகை
பயிலல்கண் ணுறினுங் காண்டன்
படிவவன் றலையைத் தானே
அயிலினு நலனே யென்று
வறைகுவ ரறிந்து ளாரே. ௨௨

[நீராடும்போது தலையிலுள்ள பேன்கள் யாவும் அந்நீரிலே போதல், தலைமயிர் சிக்குறல், தந்தம்வீழல், தாம்பூலம், முத்து, சந்தனம்.]

தலைமயிர்ப் பேன்க ளெல்லாஞ்
சலமுறக் காணிற் *சூர்போந்

---

* சூர் = துன்பம்,

தலைமயிர் சிக்க தாகத்
தந்தமே வீழக் காணின்
தொலைவழி யேக வாக்கச்
செல்வது தொடரும் டாக்கும்
இலையுமொண் முத்தே சந்தே
காணினூ தியமே யெய்தும். உ௩

[செங்நிறவாடையுடுத்தல், மொட்டைமரத்தி லேறல்,
மண்டை, யூபத்தம்பம், பருத்தி, எட்டிமரம்,
எண்ணெய், விளையாட்டு, புத்து, குரங்கு,
இரும்பு, கரும்பாம்பு, கழுதை, கழுகு.]

இரத்தவத் திரந்த ரித்தன்
மொட்டைவன் மரத்தி லேறல்
உரத்தனு விழந்த மண்டை
யுயர்வுறு வேள்வித் தம்பம்
பருத்தியெட் டிமர மெண்ணெய்
படர்விளை யாடல் புத்துக்
குரக்கிரும் பிருண்ட பாம்பு
கோகுவெங் கழுகே ஞேயாம். உ௪

[கழுதை ஒட்டகம் கடா என்பவற்றெதனையேனுங்
கட்டியுள்ள சகடத்திலேறுதல், செவ்வேள் முத
விய தெய்வ விக்கிரகங்கள்.—கை கால்
முரிந்து கிடத்தல்.]

வேசரி நெடுங்க ழுத்தல்
வெங்கடா யாத்த பண்டி
ஆசையொ டேறக் காணி
னடுக்குமே மரண காலம்
ஏசறு செக்கர் வேண்மற்
றியவுள்விம் பங்கள் கைகால்
ஆசற முரிவு காணி
னருமகன் முதலோர் சாவார். உ௫

[முன்னே யிறந்துபோனவனை தன்னுடைய மகன் துன்
பப்படுதல், அங்ஙனமே (இக்கனவுகாணுந் தந்தை)

னது சிந்தை திடுக்கிட வெடிக்கும் வெடி யொலி
செவியிலேறுதல், தேவர்களழுதல்.]

முந்திறந் திட்ட தன்கான்
முளைதுன்பப் படக்க ணுக்காண்
தந்தையத் துன்ப மெய்தல்
சாதமஞ் ஞான்று காண்போன்
சிந்தைநொந் திடமிக் கார்க்கும்
வெடியொலி செவிசேர்ந் தக்கால்
வெந்துய ருண்டாந் தேவ
ரழுதற்குந் துயர மேவும். உசு

[செம்புக்காசு வெள்ளிக்காசுக ளுள்ள முடிப்பு, முடிப்
புட்படாத அந்தப் பலதிறக் காசுகள்.]

காசுறு முடிப்புக் காணிற்
கட்டிதான் புடைக்கு மெய்யில்
காசுகள் பலவாய்க் காணிற்
கவின்றெறு பலசி ரங்காங்
காசினைச் செம்பு வெள்ளி
கணித்திடி னென்றற் கொன்று
காசற வுயர்வவ் வாற்றாற்
காணுமந் நோயு மென்பார். உஎ

[பஞ்சமர் மிலேச்ச ரெனப்படுவோர் தங்கள் கைகளில்
ஆயுதங்களைப் பிடித்துக்கொண்டு யுத்தத்திற்கு வரு
தல், சாணியினாலே வீட்டை நன்கு மெழுகி
யழகிய கோலங்களை யிடுதல்.]

பஞ்சமர் மிலேச்சர் கையிற்
படைக்கல மேந்தி வெம்போர்
விஞ்சுமா வரப்பார்த் தக்கான்
மெய்யுழை வருத்தந் தோன்றும்
அஞ்சுசிச் சாணி யாலே
யகநனி மெழுகிக் கோலம்

மஞ்சுற விடப்பார்த் தக்கான்
　　மறக்கள்வர் பயந்தா னெய்தும். ௨௮

[தனது தேகம் புட்டித்தல், தூரதேசஞ் சென்றிருந்தவர் உடம்பு பூரித்துவருதல், கடலானது ஊரை வளைதல், தனதுடம்பி லணிந்துள்ள ஆடையாபரணங் களும் பிறவும் பிறரைச் சார்தல்,]

தனதுடல் பெருத்த றூரஞ்
　　சார்ந்தவ ருடல்பூ ரித்துத்
தனதிருக் கையினைச் சார்த
　　றடங்கட லூரைச் சூழல்
தனதுடம் பினிற்பூண் டுள்ள
　　தானைபூ டணமு மற்றுங்
கனவினிற் பிறரைச் சார்தல்
　　கண்டிடிற் றீமை யாகும். ௨௯

[சந்திரகிரகணம், சூரியகிரகணம், பசுவை வாளாற் கொல்லுதல், விவாகம் நடாத்துதல், காகம் பன்றி மந்தியென்பன வீட்டுள்ளே நுழைதல், விதவை நுழைதல், விதவையைக் கூடுதல், பாம்பு முதலிய விடவுயிர்கள் மிகுந்திருத்தல்.]

மதியினைப் பகலோன் றன்னை
　　வாளராத் தீண்ட வாவை
விதிர்கர வாளாற் கொல்ல
　　விவாகமே நடத்தக் காகம்
விதவைவெம் பன்றி மந்தி
　　யென்பன வீட்டுட் செல்ல
விதவைதோள் சேர நஞ்சா
　　விகண்மிகக் காணிற் றீதாம். ௩௦

கரியொத்த மேனியுள்ளோன் கரியவுடையுடுத்துக் கரிய பூமாலையோடு இரும்பாலாகிய ஆபரணமு மணிந்து கொண்டு வருதல், கரியமேனியான் கையாலே

கல்லெறிதல், கரியவுடையுடுத்தாளைக் கலத்தல்.]

கரிநிறத் தான்க றுப்புக்
காழக முடுத்து மாலை
கரிதெனப் பூண்க ரும்பொன்
னெனவணிந் தெய்தக் காணிற்
கரியவண் ணத்தான் கையாற்
கல்லெறிந் திடுதல் காரிற்
கரிதெனப் படமு டுத்தாள்
சேரவே காணிற் றீங்காம். ௩க

[திருவாணி யெதிரேவருதல், மலவாந்தி செய்தல், நாய்
கரடி குரங்கு என்பன கறித்தல், ஒரு சீட்டி
னைப் பெறுதல், படுகுழிக்கண் வீழ்தல்,
சேற்றிலே தோய்தல்.]

வத்திர முடுத்தா தார்முன்
வாமல வாந்தி செய்யப்
பித்துநாய் காடி பொல்லாப்
பிலவங்கங் கறிக்க வேடொன்
றத்தம துறவே யேற்க
வாழ்படு குழிக்கண் வீழச்
சுத்தமில் சேற்றிற் றோயச்
சொப்பனங் காணிற் றீங்கே. ௩௨

[சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள் விருதுக்கொடி விருக்கம்
மலை கோபுரமென்பன வீழ்தல், சிரசு வீழ்ச்சி, கைகால்
கள் வீணை நெரிந்தறுதல், விழி குருடாதல்.]

சூரியன் மதிவிண் மீனே
துவசமே தருவே வெற்பே
சீரிய சிகர மேவீழ்
வுறலருஞ் சென்னி வீழ்ச்சி
நேரிய கரங்கால் வாளா
நெரிந்தறல் விழிகே டாதல்
காரியல் கனவி லெய்திற்
காண்பலன் றீமை யாமால். ௩௩

[கடுகு, கொள், விறகு, சாமை, கருவரகு, உள்ளி, சேறு, சுரைக்காய், பலாக்காய், பாகற்காய், பூச்சுணைக்காய், எலும்பு, ஆமணக்கிநெய், திணை, மிளகு, ஆநெய், புல், காட்டுமுயல், முதலை, பன்றி.]

கடுகுகொள் விறகு சாமை
கருவர குள்ளி சேறு
படர்சுரைக் காய்ப லாக்காய்
பாகற்காய் பூச்சு ணைக்காய்
மிடலெலும் பாம ணக்கி
னெய்திணை மிளகா னெய்புல்
கடமுயன் முதலை பன்றி
கனவுறி னுந்தீங் கென்பார். ௩௪

[தனது வீட்டகத்தே தான் நித்திரைபுரியுங்கால் அவ்வீடு சுழன்றுகொண்டே பூமியி லாழ்தல்.]

தன்மனை தனிற்றூங் கேல்வை
தரையுளம் மனைசு ழன்றே
வன்மையொ டமிழக் காணின்
மனைதன்னை நீங்கு மல்லால்
நன்மைகள் குறையு மென்று
நவில்வர்சில் கனவு பார்த்த
தன்மைபோ னனவி லுந்தான்
பலித்திடுந் தடையொன் றின்றி. ௩௫

[கனவிற் கண்டவாறே நனவிற் பலிப்பனவுமுள; திருவருட் செயல்களுங் கனவின்கண்ணேயுள ; சில கனவுகள் நல்வினை தீவினைப் பேறுமாமென்று நிச்சயித்தற்குரிய நியாயங்கள்.]

அத்திறக் கனவி னுக்கே
யருட்டமிழ்ப் * புகலி வேந்தர்
முத்துநற் குடைசின் னங்கண்
முத்துறு சிவிகை கொண்ட

---

* புகலிவேந்தர்=சீகாழித் திருஞான சம்பந்தசுவாமிகள்.

சத்தியக் கனவு போல்வ
    சான்றருட் செயலு மங்காம்
இத்திறத் தாற்க ணுமெய்
    யிருவினைப் பேறு மாமே. ௧௬

மானுறு மனையி லோர்நாள்
    வைகறைக் கனவி லன்னை
போலொரு மாது வந்துன்
    றாசையா கிழுத்துப் போந்திம்
மூலையிற் கறித்தல் காண்டி
    யெனுமொழி கேட்டெ ழீஇ
மூலையிற் கறித்த தூசு
    மூடிகச் செயலுங் கண்டேன். ௧௭

நனவினிற் பொய்யன் செய்கை
    நவிற்சிபொய் யாதல் போலக்
கனவினு முளவி ரண்டாக்
    கழ † றிகம் பாமுஞ் ‡ சந்தி
எனுங்கன விருந்துண் கின்றா
    னென்னு§மா ரணிய மாறின்

---

௧௭-ஞ் செய்யுளிலுள்ள கனவு நூலாசிரியராற் கண்ணுறப்பட்டது.

† இகம்பரமும் = இவ்வுலகத்தையும், பரலோகத்தையும்.

‡ சந்தி எனுங்கன விருந்துண்கின்றான் = இகம் பரமென்னு மிரண்டற்கும் மத்தியிலுள்ள சந்தியமெனுங் கனாத்தானத்திலிருந்து அவ்விரண்டனையு மனுபவிக்கின்றனன்.

§ ஆரணியமாறினினிது றுமூன்று = யஜுர்வேத காண்வ சாகையில் **பிருஹதாரண்யகோபநிஷத்தின்** ௪-ம் அத்தியாயத்து ௩-ம் பிராஹ்மணம். அதனில் "தஸ்யவா ஏதஸ்ய புருஷஸ்ய த்வேஏவஸ்தாநேபவத இதஞ்ச பரலோக ஸ்தானஞ்ச ஸந்த்யம்" என்று கூறிச்செல்லும் வசனம். இப்பிரமாணந்தானே "கனவின் பயனு நனவின் பயனும்—வினையின் பயனவை பொய்யென வேண்டா" எனச் **சங்கற்ப நிராகரணத்தும்** வருவதாயிற்று.

இனிதுறு மூன்றி லாக
 லின்விணைப் பேறேற் பாமே. ௩அ

[தந்தை, தாய், கோழி, கொக்கு, பெண்கள், மான்,
வெண்ணிறத்தனவுள் மோர் பருத்தி அன்ன
மெனப்படு மிம்மூன்றுமல்லாத மற்
றைப் பண்டங்கள்.]

தந்தைதாய் கோழி கொக்குத்
 தையலார் தழைதின் மான்றூன்
நந்துநேர் வெண்பண் டத்து
 ணறியமோர் பருத்தி யன்னம்
இந்தமூன் றல்லான் மற்ற
 யாவையுங் கனவிற் காணின்
நிந்தைதா னில்லா நல்ல
 பலனென நிகழ்த்த லாமால், ௩௯

[கருநிறத்தனவுள் யானை பசு பிராமணர் குதிரையல்லாத
மற்றைப் பொருள்கள், கனுப்பலன்கள் பலிக்குங்
கால வளவைகள், நல்லார்காண் கனவுகள்.]

கருநிறத் தனவுள் யானை
 கவினுடைப் பசுபூ தேவர்
பெருவிறற் குதிரை யல்லாற்
 பிறபொருள் காணிற் றீதாந்
தெருளுற நால்யா மத்துஞ்
 சேர்கனுப் பலனே ராக
வருடமெண் டிங்கண் மூன்று
 மாதமோர் மாதத் தெய்தும். ௪௦

ஆரருணோதயத்தி
 லறைந்தவிக் கனவுக் காட்சி
சாருமேற் பத்து நாளிற்
 சாற்றிய பலனும் பானுப்
பேருளோ னுதயத் தாயிற்
 பின்றலின் றுடன்ப லிக்குஞ்

சீருளோர் கனவெல் லாமச்
செக்கர்வே ளாய்நி லாவும். சக

[இங்கே சொல்லப்பட்ட சொப்பன பலனளவுகள் குறை
பினும் வேறுபடினும் அவை, நன்று தீதென்பவற்
றடங்கும். பகலிற் காணப்படுங் கனுக்கட்குப்
பலன்களில்லை. அவையெல்லாம் அனுப
விக்கவேண்டிய வினைப்
பயன்களாகும்.]

இங்குநா னுரைத்த வாற்று
னெய்துசொப் பனமா னங்கள்
மங்கிமா றுறினு நன்று
தீதென வகுக்கு மாற்றுற்
பங்கமின் றவைதா மவ்வி
ரண்டுமொப் பலிக்கு மென்றாழ்
தங்குறு பகற்க னுக்கட்
கவையிலை கருமச் சார்பாம். சஉ

[உட்டிணமானது சிரசி லேறுமாயின், பலதிறக்கனவுகள்
பல்கும்; அவைகளும் பகற்கனுப்போலப் பலனற்றவை
களாய் அனுபவிக்கவேண்டிய வினைப்பயன்களே
யாகும்; இக்கனவு நனவைப்போலத் தெளி
விலது; உயிரை மயக்கத்திற் பொரு
த்துவிக்கும்.]

ஆவியிற் குரிய வோ*ரைந்
தவத்தையிற் சேர்க னுத்தான்
தாவதி தாபஞ் சென்னி
சார்ந்திடிற் பலவாய் மல்கும்
மேவவை பகற்க னுப்போல்
வினைப்பய னளவா மிந்த
ஓவறு கனுந னுப்போற்
றெளிவில துறுத்து மையல். சங

---

* ஐந்தவத்தை = சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்.

[தீயகனவின்பலன் ஒவுமாறுணர்த்தல்.]

நன்றிலாக் கனவு காணி
னணியதை மறந்து தூக்கங்
குன்றுறு வாறு தூங்கிக்
குணக்*கினற் கண்டு மூழ்கி
வென்றிவே லேந்து செக்கர்
வேளுரு வருச்சித் தன்னோன்
தன்றகை யடிய ராசாற்
றரிசிக்கி னதன்கோ ளோவும். உச

[நறிய கனவின்பலன் நன்கு பலிக்குமாறுணர்த்தல்.]

நன்றுறு கனவு காணி
னயனங்கண் மூடா தாதி
என்றவொர் திசையிற் செஞ்ஞா
யிற்றொளி கண்டு செவ்வேண்
மன்றலம் பதங்க ளேத்தி
மயறபு மடியர்ப் போற்றித்
தன்றகை யையற் காணச்
சார்பல னினிது சாரும். உரு

[துறவிதானேற்கும் பிக்ஷையைக் கனவினுமேற்கக் காணிற்
றுறவு நிலைத்ததாகும். கனவிற் றோன்றியருளுந்
தெய்வச்செயல்களை, கண்டோன் பிறர்க்குக்
கூறின் அவனுக்குப் பெயர்த்தும் அத்
திறத்தன காணக்கிடையா ]

உயிர்க்குறு திப்பே றுமா
றுயர்துற வுற்றோ னேற்கும்
பயிக்கமென் பதைக்க னவி
னுங்கொளப் பார்ப்ப னயின்
அயிர்ப்பற நிலைத்த தாகு
மத்துற வுறுங்க னவிற்

---

* இனற்கண்டு = சூரியனைத் தரிசித்து.

செயிர்த்திற லொழிக்குந் தெய்வச்
செயல்பிறர்க் கோதிற் குன்றும். ௪௬

[இரகசியத்துக்கே தேவர்கள் பிரியப்படுபவ
ரென்பதையுஞ் சுருதிகள் சொல்லும்.]

தேவர்கண் மறைத்துக் கூறுஞ்
செய்கையிற் பிரிய முள்ளோ
ராவரென் *றைதரேயம்
† பிருகதா ரணியங் கூறுந்
தீவிர முடையா ரித்தைத்
தேர்ந்தென திதயச் செவ்வேள்
சேவடி யருளை நேடிச்
செல்வரன் னவரே செல்வர். ௪௭

[ஐயமறுத் தருளல்.]

எக்கனு வையும்பொய் யென்போற்
கிறையருட் செயலும் பொய்யை
ஒக்குமே நன்று தீதோர்ந்
துஞற்றுவ வுஞற்ற மெய்க்கண்
தக்கவி ரேகை யாதி
சாதனந் துடித்தன் மற்றுஞ்
செக்கர்வேள் செய்த வாறே
கனவையுஞ் செய்த தாலோ. ௪௮

தனவிலு நனவி லுஞ்சொற்
கதியிலு மறிந்த வாறே
நனவிலுங் கனவி லுஞ்சேர்
நடுநெஞ்சம் வனைந்து கோடல்

---

* ஐதரேயம்=ருக்வேத ஐதரேயோபநிஷதம்: இது உ-வது ஆரண்யகத்து ௪-வது அத்தியாயம்.

† பிருகதாரணியம்=பிருஹதாரண்யகோபநிஷத்தின் ௬-வது அத்தியாயத்து உ-வது பிராஹ்மணம்; வாக்கியம்—"பரோக்ஷப்ரியா இவஹிதேவா:." இதன்பொருளே செய்யுண் முதலடிக்கண்ணே வந்துளது.

மனவினை ஞாப கந்தான்
*முதன்மன †நிமித்த மாவில்
முனமறி யாத காண்டன்
முந்தைவா சனையா கும்மே. ௪௯

வானிடைப் பறந்தார் செய்தி
கேட்டவா மனமே தன்னை
வானிடைப் பறக்கச் செய்த
தென்னவா யிலைக ளுவில்
வானவன் செவ்வே ளாறு
வதனங்க ளேயா வென்னும்
வானிறை நியாயத் தானே
வான்செலுஞ் சூக்க மெய்யே. ௫௦

உரைத்துள மனவி னைக்கே
யுருவெளித் தோற்ற மென்பேர்
வரைப்பெரும் புவியின் கண்ணே
வழங்குத லுளதத் தோற்றம்
புரைக்குண ஞாப கத்தே
பூத்தலிற் றால சூக்க
நிரைப்பிர பஞ்சங் கட்கு
வேறென நிகழ்த்த லாமால். ௫௧

ஞாபக மாமு தற்கா
ரணத்தெழு முருப்போன் ஞால
தாபர மனைத்துஞ் சித்தாந்
தனிப்பொரு டோன்று மென்று
தாபனஞ் செய்கோட் பாட்டைத்
தடியுமப் பவஞ்ச ஞால
மாபிர பஞ்சங் கட்கு
வேறென வழங்கு மாறே. ௫௨

* முதல்=முதற்காரணம்: இது குடத்திற்கு மண் போல்வது. † நிமித்தம்=நிமித்தகாரணம்: இது குடத்தினை வனையுங் குலாலன் போல்வது.

அவ்வுரு வெளித்தோற் றக்காட்
டானது மசித்தா யுள்ள
எவ்வுரு வினையுஞ் சிந்தை
யிருந்தவா றெடுப்ப துந்தான்
தெவ்வற வசித்தே யீதுஞ்
சித்தினி லசித்தா மென்றற்
கொவ்வுமா றின்றே சித்து
மொன்றெனிற் பகுப டாதே, ருங

உயிருடம் பாகா தவ்வா
ஞெருசித்து மசித்தா யேய்பல்
பெயருடைத் தாய விந்தப்
பிரபஞ்ச மாகா தின்மை
குயிலொரு சூனி யத்துங்
குணிப்பொரு ளெதுவுந் தோன்று
தியல்புட னுளதி லுள்ள
வியல்புட னுளதே தோன்றும். ருச

தூலமெ னுடம்பை யன்றிச்
சூக்கும வுடம்புண் டென்று
ஞாலமன் பதைநன் கோர
நவில்கன வெல்லாஞ் சான்றுங்
காலொடு கைகண் மற்றைக்
கருவியு மியக்க மில்லாத்
தூலநித் திரைக்க ணுவிற்
றுலங்குடம் பவற்றின் வேறுல். ருரு

சாக்கிரப் பவஞ்சந் தூல
சரீரத்தின் புசிப்பாய் நிற்குஞ்
சூக்குமப் பவஞ்சந் தானே
சொப்பனப் புசிப்பாய் நிற்குஞ்
சாக்கிரப் பவஞ்சந் தூல
பூதத்தைச் சாரு மாறு

சூக்குமப் பவஞ்ச மெல்லாஞ்
சூக்கும பூதஞ் சாரும். ௫௬

நனவிற்குஞ் சுழுத்தி யிற்கு
நடுவுறு கனவி லந்த
நனவது மறைதல் போல
நனவினிற் கனவுஞ் சாம்பும்
இனையநி யாயத் தாலவ்
விரண்டையும் பொய்யாய் மெய்யாய்ப்
பனவிட னுண்டென் பார்நற்
பதிநிச முணர்ந்த மிக்கார். ௫௭

துயிலிட நீத்துப் போந்தோர்
தோகையைக் கூடு ஞான்று
துயிலிடங் கிடக்கு டம்பிற்
காமநீர் சொரியக் காணும்
இயல்புமக் கனவின் கண்ணே
யெய்தலிற் றூலம் விட்டே
அயலுறல் போலாஞ் சூக்க
மயல்சென்ற தாகா தன்றே. ௫௮

கனவதிகார முற்றிற்று.

---

குமாரகுருபரன் றிருவடிவாழ்க.

---

பாம்பன் :

ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகள்

அருளிச்செய்த

௧௧௦௧ - செய்யுள்களா னிரம்பியுள்ள

திருப்பாவிற்

# பெருமிறைக்கவியுரை.

# அறிவிப்பு.

(1) **சைவசமயசாரம்.**—பிரதான சுருதிகளையே பெரிதும் பிரமாணமாகக்கொண்டு தமிழில் அர்த்தபுஷ்டியோடுள்ள அரியபெரிய வசனநூல். ஒன்றன் விலை ... 1–12—0

(2) **நாலாயிரப்பிரபந்த விசாரம்.**—சிவதூஷணை யனைத்தையுஞ் சிறந்த வேத முதலிய பிரமாணங்களால் மறுத்து உண்மையை விளக்கும். வசனநூல் ... 0—8—0

(3) **ஸ்ரீ சுப்பிரமணிய வியாசம்.** வசனம்... 0—7—0

(4) **வேதத்தைக் குறித்த வியாசம்.** வசனம். நூல்களின் நுட்பம் முதலியன வுணர்த்தும் ... 0—8—0

(5) **ஜீவயாதனுவியாச** மூலமு முரையும். — ஜீவயாதனை செய்யொண்ணுதென்னும் விசேட தருமத்தைக் கூறும் ... 0–11—0

(6) **பத்துப்பிரபந்தம்.**—சஸ்திரபந்தம், மயூரபந்தம், அந்தாதித்தொடைக் கமலபந்தம், பிறிதுபடுபெங்கிகள், பிறிதுபடுபாட்டுப் பிரபந்தம், பகுபடுபெஞ்சகம், சஷ்டிவகுப்பு, தங்க ஆனந்தக்களிப்பு, அனவரதபாராயணஷ்டகம். அருத்தமுமுண்டு ... 0—7—0

(7) **திருவலங்கற்றிட்டு** க-ங் கண்டம்.—இனியபண்பாடல். குமாரக்கடவுளது திருவருளை விளக்கும். 0—6—0

(8) ஷை உ-ங் கண்டம்.—சுப்பிரமணியக் கடவுள் தோத்திரமாய், ஞானசாத்திரமாய், இலக்கியம் முதலியன வாயுளது ... 0–10—0

(9) **இன்னும் பலவுள.** பெரிய நோட்டீசுகளாலறிக.

பாம்பன்: **ஸ்ரீமத் - குமரகுருதாச சுவாமிகளா** லருளிச்செய்யப்பட்ட இவைகளும், கனவதிகாரமும் பெருமிறைக் கவி யுரையுமாகிய இப்புத்தகமும் சென்னைத் திருவல்லிக்கேணி வீரராகவமுதலி தெரு 52-வது வீட்டில் **பு. சம்பந்த முதலியார்,** சென்னை வைத்தியநாத முதலி தெரு 44 - வது வீட்டில் **கா. ஆதிகேசவ முதலியார்** இவர்களிடத்திற் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| ௩-ம் பாட்டின் | தானே | ஆனே | பூனே |
| | பகுதி | நாகம் | இந்தி |
| | த + | க + | ந் = தகன் |
| | பதி-பதி. | நாம்-பசு. | இதி-பாசம். |
| ௪-ம் பாட்டின் | திரள் | அத்தி | வெருகு |

அருள்

| | | | | |
|---|---|---|---|---|
| ௪-ம் பாட்டின் | உத்தரத்து அத்தி— | அடி | அ | (௧) |
| | மத்தியத்து வெருகு— | நடு | ரு | (௨) |
| | பூர்வத்துத் திரள்— | முடி | ள் | (௩) |

வெருதிரத்தி.

(௨)-ல் ஆதியும் அந்தமும் — வெரு
(௩)-ல் ஆதியும் மத்தியும் — திர
(௧)-ல் மத்தியும் அந்தமும் — த்தி

௨

சிவமயம்.

குஹப்ரஹ்மணேநம:

# திருப்பாவிற்

பரம்பரனேன்றற்றேடக்கத்துப் பத்திலுள்ள

# பெருமிறைக்கவியுரை.

கலிவிருத்தம்.

தானைக்கு மானைக்கும் பூனைக்கு நடுச்சா
ராநிற்கெம் மானைச்ச தாநச்சு மகத்தார்
ஆனைச்சோன் றுவற்ற வாணிக்கை யறுத்தே
ஏனைச்சோன் றுவற்ற தோலிற்கு ளிருப்பார்.

உரை.

குகனை யெப்பொழுதுமே விரும்பு நெஞ்சுடையார் நாமென்னும் பாசத்தையறுத்துப் பிரபஞ்ச விகாரமொன்றுந் தாக்காமே குகனென்னும் அப் பதிப்பொருளின்கண்ணிருப்பர்.

தானை=பகுதி. ஆனை=நாகம். "தானை பதாதி பதாகினி யூகம்—வானி யதிகம் பாடி பதாதி—சேனை நிதானந் திரள்படை யென்ப" என்று சே - திவாகரமும், "தந்தி யத்தி கடிவை கயமே—நாகந் சிந்துரந் தூங்க னிருமதம்" என்று பிங்கலநிகண்டுங் கூறுதலினறிக. ஆனை - யானை யென்பதன் மரூஉ. பூனை=இந்தி ; இது, உந்துருத்வீபீ - என்னும் வடசொல்லின் விகாரம் ; எலிப்புலியென்பது பொருள். த்வீபீ=புலி ; அமரஸிம்ஹம் காண்க. இங்கே விளக்கியவாறு பகுதி, நாகம், இந்தியென்னும் முச்சொற்களின் நடுவில் நிற்கின்றவெழுத்துக்கள் 'குகந்' எனவாம்.

குகனை யெப்பொழுதும் விரும்பு நெஞ்சுடையாரென்பார் "தானைக்கு மானைக்கும் பூனைக்கு நடுச்சா ராநிற்கெம் மானைச் சதாநச்சு மகத்தார்" என்றார். 'சாராநிற்கு' என்பது சார்ந்து நிற்கின்ற வெனும் பொருளுடைத்து.

நா=நடு. வாணி=சொல். கை=சிறுமை. தோல்=சொல். "ஒத்தல் நாவோ டணவு வயங்கிடை—நலந் திகழ் கூழை நடுவென் றாகும்" "வார்த்தையுமோர் கூத்தும் வாணி யாகும்" "சிறுமை—கரமும் பிற்புறந் தாளுங் கையே" என்று பிங்கலநிகண்டு கூறுமாற்றானும்; "தோலி பம் வனப்பு வார்த்தை" என்று லகரவேதுகை கூறுமாற்றானு மறிக. நாகமென்னுஞ் சொல்லின் நடுவெழுத்தொழிந்தசொல் நாம், ஏனைய பகுதி இந்தியென்னுஞ் சொற்களின் நடுவெழுத்தொழிந்த சொற்கள் பதி, இதியெனவாம். பதி=பசுபதியாகிய பரம்பொருள். காரணம் நிச்சயமென்னும் பொருளை இங்ஙனந் தரவந்த வொருவடசொல்லே இதி. "இதி ஹேதுப்ரகரண ப்ரகாராதி ஸமாப்திஷு |" என்று அமரஸிம்ஹம் கூறுமாற்றானும் அஃதறியக் கிடக்கின்றது ஹேது=காரணம். முதல் ஈறென்னு மிடங்களில் இதியென்னும் அவ்யயம் வர்த்திக்குமென்றும் போந்த "ஆதி" "ஸமாப்த:" என்பன காட்டுதலின் அது முதலும் ஈறுமாகவுள்ள பிரபஞ்ச காரண காரிய மாயையைக் குறிப்பானுணர்த்துதற் கெழுந்ததெனக் கோடலுமாம். பிரபஞ்ச மாயை முதலும் ஈறுமாக வுளதென்பது "ஸஹ்ருத்வை தத்ஸ்ருஜதி" என்னும் வடமொழிச் சிவஜ்ஞாநபோதத்து க-ஞ் சூத்திர வாக்கியத்தானும் அறியற் பாற்று. மேலே கூறியவாறு குகனை விரும்பு நெஞ்சுடையார் 'நாம்' என்னுஞ் சீவசுதந்திர பாசத்தை யறுத்து, ஜகத்காரணப்ரபஞ்ச விகாரமொன்றுந் தாக்காமே யாண்டுமொரு தன்மையாயுள்ள குகனென்னும் அப்பதிப்பொருளின்கண் ணிருப்பார்களென்பார் "ஆனைச்சொன் னவற்ற வாணிக்கை யறுத்தேனைச்சொன் னவற்ற தோலிற்கு ளிருப்பார்" என்றார். குகன் எனற்பாலது 'குகந்' எனவருதல் கூடுங் கொலோ

வெனின்,—அறியாது கடாயினுய் ; திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரத் திருமாலைமாற்றில் னகரமும், நகரமும் பேதமின்றி யுபயோகிக்கப்பட்டிருத்தலின் மிறைக்கவியிற் கூடுமென்க. குகனெனும் இத்திருப்பெயரின் பொருள் "பன்மதத்தொறுவெலாம்" "உலகாகமல் கசரசரம்" என்றற்ருெடக்கத்துத் திருப்பாட்டுக்களினுரைகளிலேயே விளக்கியுள்ளோம் : ஆண்டுக்காண்க. ஆன்மாக்களின் இதயகமலந்தோறு மிருந்துள்ள குகனே தாம் வழிபடுகடவு ளாகலின் "எம்மானை" என்ருர். (கூ)

**தானையின் முடியுமப் பூனையின் சமனும்**
**ஆனையி னடியுநன் ருயெழி னஙனே**
**ஆனையின் றிறனறப் பூனையின் றிறனுய்த்**
**தானையை யடையலாங் கோனையன் றகையால்.**

அருளென்னு ஞானசூரியன் அழிவற்ற ஞானசாரியனது கிருபையால் நன்ருக வுதயமாயின் அப்பொழுதே ஆணவமலத்தினியல்பு கெடச் சீவன்முத்தத் தன்மையை யடைந்து பரமுத்தியிற் றன்கடவுளாகிய குகனை யடையலாம்.

சமனென்பதற்கு முன்னரும் பின்னரும் முடியும், அடியும் வருதலால் அடியையே ஈண்டு முதலாக வைத்துக் கோடல்வேண்டும். ஆனை=அத்தி: இதனடியென்னு முதலெழுத்து - அ. "வேநது விடருகம் பூசை பாக்கன்—மார்ச்சாலம் பூனை" என்று சே - திவாகரங் கூறுமாற்ருனே பூனை=வெருகு : இதன் சமனென்னு நடுவெழுத்து - ரு. தானை=திரள் : இதன் முடியென்னுங் கடையெழுத்து-ள். இம்மூன்றெழுத்துக்களும் 'அருள்' எனவாம். (இந்த) அருளாகிய ஞானபானு அழிவற்ற ஞானசாரியனது கிருபையால் நன்ருகவுதயமாயினென்பார் "கோனையன் றகையால் தானையின் முடியுமப் பூனையின் சமனும் ஆனையினடியுநன் ருயெழின்" என்ருர். அஞ்ஞான்றே ஆணவமென்னும் யானையினியல்புகெடச் சீவன்முத்தத் தன்மையென்

ஞம் பூனையினியல்பையடைந்து பரமுத்தியிற் றன்கடவுளை யடையலாமென் றறிவுறுப்பார் "அஙனே ஆனையின் றிற னறப் பூனையின் றிறனுய்த் தானையை யடையலாம்" என்றார். தன் ஐயை என்னுஞ் சொற்றொடர் முதனீண்டவழித் "தானையை" எனவாயிற்று. ஐ=கடவுள்; யகரவேதுகை காண்க. கோனை=அழிவின்மை; மேலையெதுகையுடைச் சூடாமணிநிகண்டு காண்க. தகை=கிருபை யென்பதைத் "தகையென்ப தழகு பண்பு தயையொடு பெருமை நாற் பேர்" என்னுங் ககரவேதுகைக் கூற்றுழைக் காண்க. அஙன் - காலம் இடமாயிற்று. சுட்டு, விஞவாகிய இடைச் சொற்களை யொட்டி வருஉம் ஙனம் என்பது இடத்தினை யும், தன்மையினையு முணர்த்தும் பலபொருளொருசொல் லாம். அங்ஙனம் என்பது அஙன் - என விகாரப்பட்டு நின்றது. ஏ - அசை.

ஞானசாரியனது கிருபையால் அருண்மூத்தி யடையலாமென்பதற்குரிய சுருதியாதி பிரமாணங்கள் "ஓதிநூல் சாமிமொழி" என்றற்றொடக்கத்துத் திருப்பாட்டுரையின் கண்ணேயே விளக்கினும்: கடைப்பிடிக்க.

ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரமென்னுங் கவிக்கூறு நான்கனிற் சித்திரம் மிறையெனப்படும். வன்மை மிறையாகலின் அதுகொண் டரிதிற்பாடப்படும் அது மிறைக் கவியாம். அத்தகைய இக்கவியேயன்றி எதுகை மோனை முதலிய நயம்பிழையாவெழில்வாய்ந்த பஃறிறத்த சித்திரமும், சித்திரத்துட் பல சித்திரமார்ந்த விசித்திரமுமுற்ற மிறைக்கவி பலவற்றையும்—"யாப்பி னிலக்கணமும் யாத்த விலக்கியமும்—யாப்பொலிபல் சித்திரமு நச்சியல்போய்— மூப்போ—தலங்கற் றிரட்டினிரண் டாங்கண்டம் பாருன்— விலங்கைத் தறித்து விடும்." என்னுங் காசியாத்திரைத் தூக்கின்படி இந்நூலாசிரியருடைய திருவலங்கற்றிரட்டின் உ-ங் கண்டத்தும், சஸ்திரபந்தந் தொடக்கமாய பத்துப் பிரபந்தத்தும், கஉஅக - திருப்பாடல்களடங்கிய குமரகுருதாசசுவாமிகள்பாடலென்பதினுங்கண்ணுறலாம். (ச)

இந்த ௩-௪-ம் மிறைக்கவிகளிலுள்ள வன்மைகள் அடியில் வகுக்கப்படுமாறு ௧௪-என்க.

௩-ந் திருப்பாட்டு.

(௧) ௰-ஈருகும் ஓரோசையில் தானை, ஆனை, பூனையெ ன்னு முக்கூற்றில் ஆறெழுத்துக்க ளெடுத்துக்கொள் ளப்பட்டன.

(௨) இரண்டிரண்டாய அவ்வெழுத்துக்களின் சொற்கள் பகுதி, நாகம், இந்தியென்னுஞ் சொற்களைப் பயக்கு மாற்ருனே மும்மூன்றெழுத்துக்க ளாக்கப்பட்டன.

(௩) அவற்றுட் பரமான்மாவின் திருநாமமென்னுங் குக னென்பது போதர நடுவெழுத்துக்கள் குறிக்கப்பட் டன. அவை—பிருதிவி அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சந்திரன், சூரியன், ஆன்மாவென யாவுமாம் அட்டமூர் த்தங்களின் நாப்பணிருந்து அவையற்றை யியக்குகின் றவனே குகனெனக் குறிப்பா னறிவுறுப்பனவாகவு மிருக்கின்றன. மேலிருவன்மைகளும், பிறவுமில்லாமே இவ்வாறு மும்மூன்றெழுத்துக்களில் நடுவெழுத்துக் களை மட்டுமெடுத்து ஒரு சொல்லாக்கிப் பொருள் கொண்டு பாடுதலை நடுவெழுத்தலங்காரமென்ப.

(௪) இவ்வலங்காரம்—ஆனை, பூனை, தானையென்னும் மூன் றினின்றும் விளைந்தது ; பாட்டுமதுவே யாகலின் அம்மூன்றும் அத்தி, வெருகு, திரள் என்னுஞ் சொற் களைப்பயந்து அவையற்றின் முதல் இடை கடையெழு த்துக்கள் அருளென்னுஞ் சொல்லைப் பயக்குமாருகவு நிற்றலின் அவ்வலங்காரத்தி னுள்ளோரலங்காரமு மாம்.

(௫) இது பிறிதொருபாட்டிற்கு (தானையென்றற் ருெடக் கத்து ௪-ந் திருப்பாட்டிற்கு) வேருேராற்ருற் பொ ருண்முடிய நிற்றலுமோரலங்காரமாம்.

(௬) அங்ஙனமே ஆனை முதலிய மூன்றற்குமுரிய சொற் கள் இரண்டெழுத்துமுதற் பல வெழுத்துக்களிலு

மிருப்ப அவற்றொன்றுமெடாமலும், மேன்முறையில் வழாது அத்திமுதல் மும்மூன்றாகவே யெடுத்துக் கொண்ட காரியப்பாட்டுமை மேலே யாக்கப்பட்ட பகுதி, நாகம், இந்தியென்பவற் றெதனையுமெடாம லும், அவையற்றின் நடுக்களையே ஒரு சொல்லாகக் கிரகித்துக்கொண்டவாறு கிரகித்துக்கொள்ளாமலும் முதல் இடை கடை நிற்பனவற்றைக் கிரகித்துக்கொ ண்டதும் ஓரழகே.

(எ) பகுதி, நாகம், இந்தியென்பவற்றின் நடுவெழுத்துக்க ளொழிந்த ஏனையவெழுத்துக்களும் வாளா நில்லாமே யேற்புடைப்பொருடந்து நிற்கின்றன.

(அ) அவ்வாறு நிற்கும் பதி, நாம், இதியென்பன முறையே பதி, பசு, பாசமென்னும் பொருளவாகலின், "பதி பசு பாச விதிமுறை கிளக்கும் வாய்ந்த நூல்கள்," எனச் சங்கற்பநிராகரணத்திற் சாற்றுற்றவாறு ஈச் வரப்ரோக்தாவளி நிர்ணயமாய் நிற்றலுமறிக.

(கூ) ௩-ம் அடிச்சொற்களை ஆனைச்சொல் - நா - வற்ற - ஆணிக்கை - அறுத்தே எனவெடுத்துக்கொண்டு அவ்வ டிக்கும், ஏனைச்சொல் நா அற்ற தோலிற்குளிருப்பார் என்னும் ௪-ம் அடிக்கும் "நாமென்றுரைக்கும் நாவி னது செயலறும்படி உறுதியான உடலசைவைக்கெடு த்து, ஏனையசொற்களும் வெளிப்படுமாறு நடுவே நிற்கு மனமுமிறந்த (அந்த) உடம்பினுட் பரமுத்தி யெய்துங்காறு மிருப்பர்" என மேலடிகளோடு பொருந்தப் பொருள்கொள்வுழி வாக்கு, காயம், மன மென்னுந் திரிகரணங்களும் வெளிப்படும். படுமாற் றானே உறுப்புப்பொருள் பயக்கத்தக்க நா, கை, தோலென்னுஞ்சொற்களைச் சிலேடையில் நிறீஇயின மையும் ஓரழகே. இங்ஙனம் கையென்பது காயத்தை யும், நடுவெனும்பொருளைப் பயக்கத்தக்க நாவென்

பது மனத்தையும் ஆகுபெயரா னுணர்த்தி நின்றன வென்க.

(௧0) அடிதோறுமுற்ற சீர்கள்.— தேமாங்காய், தேமாங்காய், தேமாங்காய், புளிமாவென்னும் வாய்பாடுடைமையிற் பாட்டுமொரு வண்ணமாயிற்று.

௪ - ந் திருப்பாட்டு.

(௧௧) முத்திநிலை அருளானது மேலானவனிடத்திலிருந்து இறங்கவேண்டுமென்பதை அறிவுறுக்குங் குறிப்பாகவும் அட்டமூர்த்தங்களை யு நடுவிருந் தியக்குவானது அத்துவித அருளின் வியாபகம் ஆதி மத்தி அந்தமெங்கணுமுளதென்பதை அறிவுறுக்குங் குறிப்பாகவும் திரளென்பதற்காய தானையைப் பூருவத்திலும், வெருகென்பதற்காய பூனையை மத்தியத்திலும், அத்தியென்பதற்காய ஆனையை உத்தரத்திலும் வைத் தோதினர். அருள்நிற்குந் திரள் முதலிய மூன்றனிலுமுள்ள மற்ற வெழுத்துக்களும் வாளா நில்லாமே "அருளென்ப கருணை சத்தி" என்று ககரவேதுகை கழறுமாற்றானும் அருள் சத்தியென உருவாகவுமுள்ள தென்பதை யுணர்த்துமாறு "வெருதிரத்தி" என நிற்க அச்சொற்களை யெடுத்துக்கொண்டதும் வியக்கற்பாற்றே. (ஸூ௫௪) ஸ்திரம் - வடசொல்; உறுதியெனும் பொருளுடைத்து.

(௧௨) மும்மூன்றெழுத்துக்களை இருமுறை பயக்குமாறெடுத்துக்கொள்ளப்பட்ட தானை முதலிய மூன்றும் அவ்வளவில் நில்லாமே ஈண்டேற்புடைப்பொருளுந்தந்து நிற்றலின், ஸ்காந்த மஹாபுராண சம்பவகாண்டத்து ௫௫ - ம் அத்தியாயத்து ௨௧ - ஞ் சுலோகம்—"பரமேசுரீ! மகா (தானை =) சேனைகளாய உயிர்த்திரள்கள் அந்தரங்க புத்தியோடு நமற்கரித்துக்கொண்டு அவனது சுவாதீனத்திலிருக்கின்ற காரணத்தால் உன்னுடைய திருமகன் மகாசேனனெனப்படுவோனாயினன்"

என்று சிவபெருமான் கூறியருளினனெனும் பொருள் பயத்தலின் இப்பொருள் கருதியும், ஆன்மாவுக்கான்மாவெனப்படும் அந்தரியாமியே கடவுளாகலின் அது கருதியும் அக்கடவுளைத் தன்னுடைய கடவுளெனும்படி இரட்டுறமொழிதலென்னும் உத்தியில் தானையென் பதியைந்தவாறும் ; அந்தகார மேனியும் நானென்னு மதமுமுளது ஆணவமாகலின் அது கருதி அதனை யானையாகவும், கேவலமென்னு மிரவிலுஞ் சகல மென்னும் பகலிலும் பார்வையுடையவனாயிருத்தல் ஞானியென்னுஞ் சீவன் முத்தன தியல்பாகலின் அது கருதி அதனைப் பூனையாகவும் உருவகஞ்செய்ய இயைந்தவாறும் பெரிதும் வியக்கற் பாலனவே.

(௧௩) ஆற்றொழுக்குடைய முற்பாட்டுப்போலாது முதலினும் ஈற்றினு நிற்குமொழிகள் தம்முட் பொருளேக்கமுடையனவாகலின் இத்திருப்பாட்டுப் பூட்டுவிற் பொருள்கோளாம்.

(௧௪) அடிதோறு மிரண்டாமெழுத்து ஒன்றத்தொடுக்கப்பட்ட நயப்பாடுடைத்தாகலின் "ஒரெழுத்தொன்றினிடை" என்னும் **விதிப்படி** இடையாகெதுகையாம்.

இப்பதினான்கும்—பண்டையார் வழக்கிற் பிரமாணமாக நிலவுகின்ற இருக்கு, யசுர், சாமம், அதர்வணம், சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோபிசிதம், சோதிடம், புராணம், நியாயம், மீமாஞ்சை, மிருதியென்னும் **வித்தை** பதினான்கென்பதையும் ; இவை "பலகலையா கம வேதம் யாவையினுங் கருத்துப் பதிபசுபா சந்தெரித்தல்" என்று சிவப்பிரகாச மியம்புமாற்றாற் பதி பசு பாசமென்னும் முப்பொருள்களைப் பகுத்துக் கூறவந்தனவாகலின், அவ்வாறு கூறுதலின் ஐயந் திரிபறக் கூறுஞ் சிவஞானபோதம் முதலிய சித்தாந்தசாத்திரம் பதினான்கென்பதையுங் குறிப்பாலுணர்த்த அமைந்தவாறுமாயின. அந்நூலெல்லாங் கூறும் பதி பசு பாசமென்பனவே இங்குமுள

வெனவும், பலவேறு வகைப்பட்ட முத்திகளையெல்லாம் "பழிசேர் முத்தி" எனக்கூறியொழித்த மேலைச் சிவப்பிர காசத்தில் "திரிமலமு மகலவுயி ரருள்சேர் முத்தி திகழ்மு த்தி" என அந்தச் சித்தாந்தமுத்தி வெளிப்பட்டபடியே இங்கும் அஃதருளென்னுமாற்றா லினிது வெளிப்பட்டதெ னவும் அமைந்திருத்தலுமறிக. இதுவேயுமன்றி, பாட்டு நான்கடிச் செய்யுளாயினமை—சாலோகம், சாமீபம், சாரூ பம், சாயுச்சிய மாகிய கதி நான்கனுக்குமுரிய சரியை, கிரி யை, யோக ஞான மார்க்கங்களையும்; அத்திறவடிச் செய்யு ளிரண்டேயாக, அவை சொல்லும் பொருளும் ஒன்றை யொன்று நீங்காமேயாக வமைக்கப்பட்டமை—பதி பசு வென விருதிறச் சித்துக்களுமுள, அவை யொன்றை யொன்று நீங்காத அத்துவித நிச்சயத்துள்ளன வென்பதை யும்; இரண்டும் பதினாறு சீர்களாய் நிற்கின்றமை—(௧) வேதநிந்தை சைவநிந்தை யென்பன பொறா நெஞ்சம், (௨) ஐம்புலன்கட் கேவல்செய்யா மதுகை, (௩) பிறவி தீதெனுப் பேதையரோடு பகை, (௪) நல்லறச் செல்வரோடு நட்பு, (௫) நல்லன்பர்க் கில்லையெனுதுதவு மியல்பு, (௬) மாதவத்தோர் வெறுக்கினு மவரை வணங்கு மகிழ்வு, (௭) நறியவுபதேசத்தி லுறுதிகோடல், (௮) சிவனன்பர் தீதுபுரி யினுமதனைச் சிவச்செயலாகக் கொள்ளுந்தெளிவு, (௯) மனமும் வாக்குஞ் சிவனன்பர்மாட் டொருப்படல், (௧௦) கனவினுஞ் சிவனன்பர்க் கடிமையாங் கருத்து, (௧௧) சிவனை யன்றிப் பிறகடவுளை வழிபடாநிலை, (௧௨) சிவனுடைய புக ழ்களையே நாடோறு நவிறல், (௧௩) புறச்சமயங்களை யொ ழித்திடுதிறன், (௧௪)பிறர்பொருள் விழையாவண்மை, (௧௫) பரதாரம் விரும்பாநோன்பு, (௧௬) யானெனதெனுஞ் செரு க்குறுத்துறவு என்னும் பதினாறு பேறுகளையும்; இம் மார்க்கத்தை விரும்பிய அந்தப்பசுவுக்கு முத்திநெறிகாட் டும் முருகப்பெருமானது மந்திரம் ஆறெழுத்தாகலின் அதனைக் குறிப்பா னறிவிப்பா னெடுத்துக்கொள்ளப்பட் டன விவையென்னும்படி தானை, ஆனை, பூனை யெனவுள்ள

வாறெழுத்துக்களால் ஏற்புடைப்பொருள் பெறீஇ நிற்கும் அந்தப் பதினாறு சீர்களும் "குற்றிகரங் குற்றுகர மென் றிரண்டு மாய்தமு—மொற்று மெனவொரு நான்கொழித் துக்—கற்றோ—ருயிரு முயிர்மெய்யு மோதினார் கொள்ளச்-செயிர்தீர்ந்த செய்யு ளடிக்கு." என்னும் **விதியின்படி** ஒற் றென்னு மெய்யெழுத்தொழித்து (௧௦௦) நூறெழுத்தா யிருத்தலை நோக்க, யஜுர்வேத **சதருத்ரீயஜபம்** விசேடம், அது ஷடக்ஷரஜபத்துக்கு வேறுருதென்பதையுங் குறி ப்பானறிவிக்க வமைந்தவாறு மறியக் கிடக்கின்றது. ஈண் டிப்படியெல்லா மமைவுறச்செய்தமை யெற்றுக்கென்னின்,- அறியலுறுவார்க்குச் சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல், விழுமியது பயத்தலென்னும் அழகு முதலியன வாய்ந்து சிறந்த மிறைக்கவியென்பது காட்டற்கே யென்க.

## பெருமிறைக்கவியுரை முற்றிற்று.

———:o:———

**குமரகுருபரன் றிருவடிவாழ்க.**